விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: ஆறு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 வைகாசி 31 வியாழக்கிழமை (14.06.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 177

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் அமெரிக்காவை தலையிட வலியுறுத்தல்

## அரச சார்பற்ற அமைப்புக்கள் கூட்டாக கோரிக்கை

(கொழும்பு)

இலங்கை விவகாரங்களில் அமெரிக்கா தலையிட வேண்டும் என்று அரச சார்பற்ற நிறுவனங்கள் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளன. இது தொடர்பாக மனிதாபிமான மற்றும் அபிவிருத்தி பணிகளுக்கான அரச சார்பற்ற அமைப்புக்கள் கூட்டாக அமெரிக்க இராஜாங்க செயலாளர் கொண்டலீசா றைசுக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளனர். (06 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் மன்னிப்பு கேட்டதற்கு அமைச்சர்கள் கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

கொழும்பில் இருந்து தமிழர்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டமைக்கு பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க பகிரங்க மன்னிப்புக்கேட்டதற்கு அமைச்சர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கத்தின் தலைமை கொறடாவும் அமைச்சருமான ஜெயராஜ் பெர்ணான்டோ புள்ளே கருத்துத் தெரிவிக்கையில், பிரதமரின் அறிக்கையானது நாட்டின் இராணுவத்தை காட்டிக் கொடுப்பதாகும் என்றார்.

மகிந்தவின் சகோதரரான கோத்தபாய ராஜபக்ஷவின் ஆதரவாளர்களாக கருதப்படும் அமைச்சர்களான கருஜயசூரிய, ராஜித சேனாரட்ண, ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே ஆகியோரின் பகிரங்க எதிர்ப்பைத் தொடர்ந்து பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க பதவி விலகக்கூடும் என்று தெரிகிறது.

ஜாதிக சங்க சம்மேளனத்தின் செயலாளர் கலகொட்டெ ஞானசாரவும் பிரதமர் ரட்ணசிறிக்கு கடுமையான எதிர்ப்புத்தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் கூறுகையில், கருணா குழு விலகிய பின்னர் புலம்பெயர் தமிழர்கள் (06 ஆம் பக்கம் பார்க்க)

## மாணவன் உட்பட 5 இளைஞர்கள் சாவகச்சேரியில் நேற்று கைது

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரியில் நேற்றுக் காலை மாணவன் உட்பட ஐந்து இளைஞர்கள் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டனர் என உறவினர்களால் யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இவர்ளில் சாவகச்சேரி சங்கத்தானை இந்துக் கல்லூரியில் உயர்தர வகுப்பில் கல்வி பயிலும் குமாரகுலசிங்கம் தர்ஷிகன் (வயது 19) என்ற மாணவன் நேற்றுக் காலை நண்பர் ஒருவரிடம் பாடக் குறிப்பொன்றை வாங்க வீட்டில் இருந்து சென்றபோது சிறிது நேரத்தில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டதாகவும் பின்னர் அப் பகுதிக்குச் சென்றபோது பவள் கவச வாகனத்தில் இராணுவத்தினர் அம் மாணவனை ஏற்றிச் சென்றதனை கண்டதாகவும் உறவினர்களால் செய்யப்பட்ட முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சாவகச்சேரி கோணவலையைச் சேர்ந்த வர்ணகுலசிங்கம் வர்ணகாந்தன் (வயது 22) என்ற இளைஞன் நேற்றுக் காலை காணாமல் போயுள்ளதாகவும் வீட்டிற்கு அண்மையாக இராணுவ பவள் கவச வாகனங்களின் நடமாட்டம் இருந்ததாகவும் உறவினர்களால் யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் (06 ஆம் பக்கம் பார்க்க)

## கொடிகாமம் மந்துவில் பகுதியில் நேற்று மூன்று இளைஞர்களின் சடலங்கள் மீட்பு

(கொடிகாமம்)

கொடிகாமம் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த மந்துவில் மாத்தளன் குளம் வெளிப்பகுதியில் நேற்று முற்பகல் சூட்டுக்காயங்களுடன் மூன்று இளைஞர்களின் சடலங்களை கொடிகாமம் பொலிஸார் மீட்டுள்ளனர். சம்பவத்தில் மீட்கப்பட்ட மூன்று சடலங்களும் இதுவரை இனங்காணப்படவில்லை எனவும் மூவரும் 20 வயது தொடக்கம் 25 வயது மதிக்கத்தக்கவர்கள் என்றும் ரன்னிங் சோட்ஸ், சாரம் மற்றும் சேட் அணிந்திருந்தார்கள் என்றும் கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த மூவரின் சடலங்களையும் இனம் காண்பதற்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் (06 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் விசேட பணிப்பில் யாழ்ப்பாணத்தில் குடிசன மதிப்பீடு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதியின் விசேட கட்டளையின் பிரகாரம் யாழ்ப்பாணத்தில் விசேடமாக குடிசன

இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

இது சம்பந்தமான சுற்று நிருபங்கள்

## சர்வதேச வல்லுநர்குழுவின் அறிக்கையை கவனமாக ஆராய ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

ஆள் கடத்தல்கள் மற்றும் படுகொலைகள் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணை

உத்தரவிட்டுள்ளார். இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த பேச்சாளர் லூசியன் ராஜகருணாநாயக்க சர்வ தேச வல்லுநர் குழுவினர் தெரி

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதியின் விசேட கட்டளையின் பிரகாரம் யாழ்ப்பாணத்தில் விசேடமாக குடிசன மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த மாதம் கொழும்பில் இடம் பெற்ற அரச அதிபர்களுக்கான கலந்துரையாடலைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

இது சம்பந்தமான சுற்று நிருபங்கள் யாழ்.மாவட்டத்தில் உள்ள உதவி அரசாங்க அதிபர் காரியாலயங்கள் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு மாவட்ட புள்ளிவிபரக் கணக்கெடுப்பின் பிரதான (06 ஆம் பக்கம் பார்க்க)

(கொழும்பு)

ஆள் கடத்தல்கள் மற்றும் படுகொலைகள் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணையத்தின் செயற்பாடுகளை மிகக் கடுமையாக விமர்சனம் செய்து வெளியிடப்பட்டுள்ள சர்வதேச வல்லுநர் குழு அறிக்கையை கவனமாக ஆராய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார். இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த பேச்சாளர் லூசியன் ராஜகருணாநாயக்க சர்வ தேச வல்லுநர் குழுவினர் தெரிவித்த கருத்துக்கள், கவலைகள், பரிந்துரைகள் ஆகியவை குறித்து கவனமாக ஆராய மகிந்த உத் தரவிட்டுள்ளார் என்றார்.

16 வழக்குகளின் (06 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று ஜெனீவா பயணம்

(கொழும்பு)

ஜெனீவாவில் நடைபெறவுள்ள 93 ஆவது சர்வதேச தொழிலாளர் வருடாந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்றுக் காலை ஜெனீவா பயணமானார். நாளை நடைபெறும் இம் மாநாட்டில் ஜனாதிபதி சிறப்புரையாற்றவுள்ளார்.

இவ் விஜயத்தின் போது சர்வதேச தொழில் அமைப்பின் பணிப்பாளர் நாயகம் ஜுவான் செமாமியா மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் ஆணையாளர் அந்தோனியோ குட்டரேஸ் ஆகியோருடன் (06 ஆம் பக்கம் பார்க்க)

## சிறுபான்மையினக் கட்சிகள் அரசிலிருந்து விலகவேண்டும்

### போருக்கு எதிரான முன்னணி யோசனை

(கொழும்பு)

அரசாங்கத்துடன் இணைந்து செயற்படும் சிறுபான்மை இனக் கட்சிகள் அரசில் இருந்து வெளியேறவேண்டுமென போருக்கு எதிரான முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

நாட்டில் இடம் பெறும் மனித உரிமை மீறல் சம்பவங்களை தடுப்பதற்கு போருக்கு எதிரான முன்னணி சில யோசனைகளை முன்வைத்தது. இது தொடர்பாக கொழும்பில் ஊடகவியலாளர் (06 ஆம் பக்கம் பார்க்க)

## பணம் பெற்றுக் கொண்டதை புலிகள் ஏற்றால் பாராளுமன்ற தெரிவுக்குழுவை அரசு நியமிக்கும்

### அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே உறுதி

(கொழும்பு)

கடந்த பொதுத்தேர்தலின்போது வடக்குக் கிழக்குப் பிரதேச மக்களை வாக்களிப்பதிலிருந்து தடுப்பதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் இருந்து 150 கோடி ரூபாவை பெற்றுக் கொண்டதாக புலிகள் ஏற்றுக்கொண்டால் அது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக பாராளுமன்றத் தெரிவுக்குழுவை அரசாங்கம் நியமிக்குமென பெருந்தெருக்கள் அமைச்சர் ஜெயராஜ் பெர்ணான்டோபுள்ளே தெரிவித்தார்.

கடந்த சில வாரங்களாக அரசுக்கு எதிராக சுமத்தப்பட்டு வரும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுக் காலை அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோதே இவர் இவ்வாறு கூறினார்.

அமைச்சர் அங்கு மேலும் கூறியதாவது; விடுதலைப்புலிகளுக்கு 150 கோடி ரூபா வழங்கப்பட்டதாகக் கூறப்படும் விடயம் தொடர்பாக விசாரணை (06 ஆம் பக்கம் பார்க்க)

## அக்கரைப்பற்றில் இரு சடலங்கள் மீட்பு

அம்பாறை அக்கரைப்பற்றுப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் இரு சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. நேற்றுக் காலை 6 மணியளவில் அக்கரைப்பற்று நான்காம் கட்டை வீதியில் இச் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. மீட்கப்பட்ட சடலங்கள் அக்கரைப்பற்று 7-ம் குறிச்சியைச் சேர்ந்தவர்களான 22 வயதுடைய கந்தசாமி பிரபாகரன், 18 வயதுடைய தெய்வேந்திரம் தினேஸ்காந் என அடையாளம் காணப்பட்டுள்ளன.

அம்பாறை 5-ம் கட்டை பாடசாலை ஒன்றில் ஓட்டு வேலையில் ஈடுபட்ட இவர்கள் நேற்று முன்தினம் கடத்தப்பட்டு நேற்று சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். (ச-5)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சீரான மின்சாரம் வழங்கக்கோரி

# வலி.தெற்குப் பிரதேச செயலகம் முன் பாதிக்கப்பட்ட மக்கள் ஆர்ப்பாட்டம்




(யாழ்ப்பாணம்)

வலி.தெற்குப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் நேற்று வலி.தெற்குப் பிரதேச செயலகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தமது பகுதிக்குச் சீராக மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனக் கோரியே அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தின் முடிவில் 106 பேர் கையொப்பமிட்ட அறிக்கை ஒன்று பிரதேச செயலருக்குக் கையளிக்கப்பட்டது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இதன்கீழ் கைச்சாத்திட்டுள்ளவர்களின் வீடுகளுக்கும் நீங்கள் வதியும் வீட்டிற்கும் உடுவில், காங்கேசன்துறை வீதியிலிருந்து மேற்கே 200 மீற்றர் வரையான தூரத்தில் உள்ள நாகம்மாள் கோவிலுக்கு அருகாமையிலுள்ள தொம்பை வீதியில் பொருத்தப்பட்ட மின்மாற்றி பொறியில் இருந்து மின்சாரம் வழங்கப்படுகின்றது.

உடுவில் கிராமத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் சுன்னாகம் சந்தையடி மின்மாற்றிப் பொறி, மருதனார்மடம், உடுவில் மகளிர் பாடசாலைக்கு அருகாமை போன்ற பல மின்மாற்றிப் பொறிகளூடாக மின்சாரம் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

நாங்கள் வதியும் பகுதிகளைச் சுற்றியுள்ள பகுதிகளுக்குத் தினமும் இரவு பகலாக 24 மணித்தியாலமும் மின்சாரம் வழங்கப்படுகின்றது. ஆனால் எங்கள் வீடுகளுக்கு இரவு 6.30 மணிமுதல் 9 மணிவரை ஒரு நாளும் மின்சாரம் வழங்கப்படுவதில்லை.

இதுபற்றிச் சம்பந்தப்பட்ட இடங்களுக்கு தொலைபேசி மூலமும் நேரடியாகவும் முறைப்பாடுகள் செய்யப்பட்டும் அவையாவும் செவிடன் காதில் ஊதிய சங்கு போலாயிற்று.

இலங்கையில் பெரும்பான்மையினமானது சிறுபான்மையினத்தை வேறுபடுத்துவதாகவும் பாதிப்புக்குள் வீழ்த்துவதாகவும் நித்தமும் மனக்குறைபடும் தமிழர்கள், தமிழர்கள் பிரதேசத்தில் சில சாராரின் வசதிக்கும் தேவைக்கும் சுகத்திற்கும் தக்கமாதிரி மாத்திரம் மின்சாரத்தைத் தமது சொந்தப் பொருள் போல் கருதி விநியோகத்தினை செய்வதற்கான காரணங்களை எம்மால் எடுத்த எடுப்பில் விளங்க முடியாதிருக்கின்றது.

சுன்னாகத்திலும் காங்கேசன்துறையிலும் உள்ள மின்பிறப்பாக்கிகள் மூலம் பிறப்பாக்கக் கூடிய மின்சக்தியானது தற்போது மின்சாரம் விநியோகிக்கப்படும் முழுப்பகுதிகளுக்கும் தடையின்றியும் பாரபட்சமின்றியும் வழங்கப் போதுமானதாகவிருக்கின்ற போதிலும், மின்சாரத்தை யாழ்.குடாவிற்கு வழங்குவதற்குப் பொறுப்பானவர்கள் மின்சார விநியோகத்தைத் தகுந்த முறையில் செய்யத் தெரியாமையாலும் அல்லது செய்ய விரும்பாமையாலும் எங்களுக்கு இந்தப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது எனக் கருதுகின்றோம்.

வேலைத்திறமையின்மை, நிர்வாகத் திறமையின்மை, பொதுமக்களின் நலன்களுக்கு அதிமுக்கியத்துவம் கொடுக்காத போக்கு, அறியாமை போன்றவற்றினால் தவிர்க்கப்பட முடியாதபடி உருவாகும் பாதிப்புக்களைக் குறிப்பிட்ட பகுதிமக்களாகிய நாம் மாத்திரமே முழுமையாக அனுபவிக்க வேண்டும் என்பது இயற்கை நியதிக்கு மாறானது.

உடுவில் கிராமத்தின் ஏனைய பகுதிகளில் வாழும் மக்களைப் போன்றும் யாழ். குடாவின் யாழ்ப்பாணப் பட்டினம், ஏனைய பகுதிகளில் வூழ்பவர்கள் போலும் தினமும் 24 மணிநேர மின்விநியோகத்தினை அனுபவிக்கும் உரிமை எமக்கும் உண்டு.

எனவே எங்களின் அடிப்படைத் தேவையும் உரிமையும் எமக்கு மறுக்கப்படுவதால் காரணத்தையறிந்து அதற்குரிய பரிகாரத்தை எமது பகுதிக்கான அரச நிர்வாகியான நீங்கள் ஒரு சில தினங்களில் செய்யத் தவறின் உடுவிலின் குறிப்பிட்ட பகுதிகளில் வாழும் மக்களாகிய நாம் அரச நிர்வாகத்தாலும் யாழ்.பிராந்திய இலங்கை மின்சாரசபை நிர்வாகத்தாலும் தண்டிக்கப்படுவதாகவே கருதவேண்டியிருக்கும்.ஆனால் தண்டனை வழங்கும் அதிகாரமானது நீதிமன்றத்தை விட வேறு எதற்கும் இல்லை என்றுள்ளது. (ச)

## கழகங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகள்

யாழ்.பிரதேச செயலக கழகங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகள் ஏற்கனவே அறிவித்தபடி நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் பாஷையூர் அந்தோனியார் கோவில் விளையாட்டுத் திடலில் நடைபெறும் என பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகஸ்தர் அறிவித்துள்ளார்.(அ)

## திருமுறை முற்றோதல்

அகில இலங்கைத் திருமுறை மன்றம் நாட்டில் சாந்தி சமாதானம், யுத்தமின்மை வேண்டிப் பன்னிரு திருமறை முழுவதும் முற்றோதி வருகின்றனர்.

இந் நிகழ்வில் நாளை வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் வீதி குருவார அன்னசத்திர சிவன் ஆலயத்தில் ஆலயப் பூஜையைத் தொடர்ந்து மூன்றாந் திருமுறை முற்றோதல் ஆரம்பமாகி தொடர்ந்து அடுத்த மாதம் 15 ஆம் திகதி வரை நடைபெறும். (ச)

## அதிபர் நேர்முகத் தேர்வு இன்றும் நடைபெறும்

இலங்கை அதிபர் சேவை வகுப்பு 2 தரம் II ற்கான நேர்முகப் பரீட்சை நேற்று இரண்டாவது நாளாகவும் நடைபெற்றது.

இந் நேர்முகப் பரீட்சை இன்று மூன்றாவது நாளாகவும் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ச-5)

## தனியார் வர்த்தகத்தை மேம்படுத்த நடவடிக்கை

யாழ்ப்பாணத்தில் தனியார் வர்த்தக நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துள்ளதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் எஸ்.பி.திவாரட்ண தெரிவித்துள்ளார். யாழ்ப்பாண அரச அதிபர் மற்றும் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் உள்ள வர்த்தக கைத்தொழில் மன்றங்களின் ஊடாக இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய 4 கப்பல்களில் தனியார் வர்த்தக நிலையங்களுக்கான பொருள்கள் யாழிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன. (ச-5)

# ஆறு வாரங்களின் பின்னர் பசில் ராஜபக்ஷ நாடு திரும்பினார்

(கொழும்பு)

கடந்த 6 வார காலங்களாக வெளிநாட்டில் தங்கியிருந்த, ஜனாதிபதியின் மூத்த ஆலோசகர் பசில் ராஜ பக்ஷ நாடு திரும்பினார்.

பல்வேறு ஒப்பந்த கோரல்களில் முறைகேட்டுக்குக் காரணமாக இருந்தவர் பசில் ராஜபக்ஷ என்று பதவி நீக்கப்பட்ட அமைச்சர் மங்கள சமரவீர குற்றம் சாட்டியிருந்தார். அதன் பின்னர் திடீரென பசில் ராஜபக்ஷ இலங்கையிலிருந்து வெளியேறினார்.

அதேபோல் ஜனாதிபதித் தேர்தலின் போது தமிழீழ விடுதலைப்புலிகளுடன் இரகசிய ஒப்பந்தம் செய்து கொண்டதாக பசில் ராஜபக்ஷவையும் விமான சேவைகள் பிரிவின் முன்னாள் தலைவர் டிரன் அலெஸ் குற்றஞ்சாட்டியிருந்தார்.

இதனையடுத்து பசில் ராஜபக்ஷவைக் கைது செய்ய ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியிருந்தார்.

தற்போது அரசாங்கம் கடும் நெருக்கடிக்குள்ளாகியுள்ள நிலையில் சிங்கப்பூர் வழியாக நேற்று முன்தினம் பசில் ராஜபக்ஷ நாடு திரும்பினார். (ச-5)

# குருதிக் கொடையாளர்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

உலகக் குருதிக் கொடையாளர் தினமாகிய இன்று குருதிக் கொடையாளர்களை இரத்ததானம் செய்யுமாறு யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கி வைத்திய அதிகாரி இ.சிவசங்கர் கேட்டுள்ளார்.

உலகக் குருதிக் கொடையாளர் தினத்தை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு,

இன்று உலகக் குருதிக் கொடையாளர் தினம். தன்னலம் கருதாது பிறர் உயிர் காப்பதற்காக தங்கள் குருதியைத் தானம்செய்கின்ற தன்னார்வக் குருதிக் கொடையாளர்களைக் கௌரவிக்கின்ற புனித நாள்.

உலகம் பூராகவும் முகம் தெரியாத நோயாளர்களுக்காக உதிரத்தால் உயிர் கொடுக்கின்ற உத்தமர்கள் கௌரவிக்கப்படுகின்ற நன்னாள்.

யாழ்.குடாநாட்டில் தன்னார்வக் குருதிக் கொடையாளர்களால் ஆற்றப்படுகின்ற பணி அளப்பரியது - மிகப் பெரியது. யாழ்.குடாநாட்டு தன்னார்வக் குருதிக்கொடையாளர்களை, இவர்கள் உதிரத்தால் உயிர் பெற்ற உறவுகள் சார்பாக யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்தவங்கி அவர்களை வாழ்த்தி அகமகிழ்கின்றது.

மேலும் அவர்களுக்குரிய கௌரவிப்பு விழா ஒன்றை வெகுவிரைவில் நடாத்துவதற்கும் ஆயத்தமாகி வருகின்றது.

இப்புனித நாளிலே இப்பணியில் இதுவரை இணைந்து கொள்ளாதவர்களையும் இணைய முன்வருமாறு உதிரம் தேவையான உறவுகள் சார்பாக வேண்டிக் கொள்கின்றோம். (ச-12)

# மூத்த பாதுகாப்பு ஆலோசகர் இஸ்ரேலில் காலமானார்

(கொழும்பு)

இலங்கையின் வெடிபொருள்கள் மற்றும் துப்பாக்கிச் சூட்டு ஆய்வு உயர் அதிகாரியும் பாதுகாப்புத்துறை ஆலோசகருமான கலாநிதி டி.ஏ.ஐ.முனிந்திரதாச (வயது-41) கடுமையான துரையீரல் நோய் காரணமாக இஸ்ரேலில் மரணமடைந்துள்ளார்.

பாதுகாப்புத்துறை தொடர்பான உத்தியோகபூர்வ பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தபோது அங்கு அவர் மரணமடைந்துள்ளார். இது தொடர்பில் மூத்த பாதுகாப்புத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளதாவது,

மொறட்டுவப் பல்கலைக்கழகத்தின் இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்புகள் பொறியியல் துறையின் விரிவுரையாளரான அவர், இஸ்ரேலில் உள்ள ரெல்அவிவ் பகுதியில் சில முக்கிய ஆயுதங்களைப் பரிசோதனை செய்வதற்கும் அங்கு நடைபெறும் பயிற்சிப் பட்டறை ஒன்றில் கலந்து கொள்வதற்குமாகப் பாதுகாப்புத்துறை அதிகாரிகளுடன் சென்றிருந்தார்.

எனினும் அங்கு அவர் கடுமையான சுகவீனமடைந்த நிலையில் மருத்துவமனை ஒன்றில் அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு அவசர சிகிச்சைகள் அளிக்கப்பட்ட போதும் அது பலனளிக்காது செவ்வாய்க்கிழமை உயிரிழந்துள்ளார்.

குடும்ப உறவினர்களின் வேண்டுகோளுக்கு இணங்க அவரது பிரேத பரிசோதனைகளை இலங்கையில் நடத்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

1966 ஆம்ஆண்டு பிறந்த முனிந்திரதாச, மொறட்டுவப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பிரிவில் தனது பட்டப்படிப்பை முடித்ததுடன் பிரித்தானியாவில் உள்ள லிவபூல் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றவராவார். (ச-5)

## பாலர் கல்விக் கழக விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

பாலர் கல்விக் கழக நிர்வாகத்திலுள்ள திருநெல்வேலி ஞானக்குழந்தை இல்ல பாலர் பாடசாலையின் 15-வது வருடாந்த விளையாட்டுவிழா எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலை மைதானத்தில் பாடசாலை ஆசிரியை திருமதி றயினி பிரபாகரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் கலந்து கொள்ளவுள்ளார். (அ)

துயர் பகிர்கின்றோம்

கரித்தாஸ்-கியூடெக்



அந்தோனிப்பிள்ளை மேரி கொன்செப்ரா

எமது நிறுவனத்தின் சக பணியாளராகிய
அந்தோனிப்பிள்ளை பகீரதன் அவர்களின்
பாசமிகு தாயார்
அந்தோனிப்பிள்ளை மேரி கொன்செப்ரா
அவர்கள் 13.06.2007 இறைபதம்
அடைந்ததையிட்டு துயருறும் குடும்பத்தினரின்
துயரில் நாமும் பங்கேற்பதுடன் அன்னாரின் ஆத்ம
சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

இயக்குநரும், பணியாளர்களும்,
கரித்தாஸ்-கியூடெக், யாழ்ப்பாணம்.

(C-163)

# வாழ்வின் மகிழ்விற்கு...

"நிறைகுடம் தளம்பாது" என முது மொழியாகப் பேசப்பட்டதை நிறைவு - திருப்தி உள் மனங்களுக்கு ஒப்பிடலாம். குறைகாணும் உணர்வும் குறை கூறும் மனமும் பிறர் நிறைவை ஏற்றுக்கொள்ள முடியாது திண்டாடுவதை, கலங்கித் தவிப்பதை பல சம்பவங்களில் நம் வாழ்வில் காணலாம்.

"என் கதியற்ற நிலையைக் கூட ஏற்றுக் கொள்வேன், இன்னொருவரின் நம்பிக்கை ஒளியை என்னால் சகிக்கமுடியாது" என்பார் வில்லியம் வார்ஷ். இதுவே தன் நிறைவையும் அனுபவிக்க முடியாது ஏங்கித் தவிப்பதுடன் மற்றவர் மகிழ்ச்சிகளை ஏற்கமுடியாத சிலருக்கு துன்பமாகிவிடுதல், தன் முயற்சியில் திருப்தி அடையாது இருத்தலும் ஆகும். நேற்றைய பொழுதை தொலைத்து அனுபவிக்க முடியாது. திருப்தி அடையாது வாழ்வோராக வாழ முற்படும் போது நிறைவு - திருப்தி என்பது வாழ்வில் கேள்விக்குறிகளாகவே மாறி விடுகிறது.

நான் என்னில் திருப்திகொள்ளல் ஒரு பொழுதோடுமாறவேண்டிய காட்சியல்ல. குறைகள் என எண்ணிக்கொள்பவர் அதிலிருந்து விடுபட முனையாது எண்ண அலைகளில் தம்மைக் குறைத்து மதிப்பிடுதலால் அவரது வாழ்வு எதிலும் திருப்தியும் - நிறைவும் தொலைந்துபோன ஒன்றாகிவிடுவதற்கு சில காரணங்கள் உண்டு. அவரது வாழ் வின் வளர்ச்சிப்படி நிலைகளில் ஏற்பட்ட மனவடுக்கள் ஆழமான மனப்பாதிப்பை ஏற்படுத்தி இருக்கும். அவற்றைக்கூட கடந்து நிறைவான வாழ்வில் திருப்திகாண முனைதலுக்கு வழி காணவேண்டும்.

சில சமயங்களில் சிலரது நடவடிக்கைகள், வார்த்தைப் பிரயோகங்கள், அதிகாரத்தனங்கள், அலட்சியப் போக்குகள், சினங்கொள்ளல் தொடராக எதிர்கொள்பவருக்கு தாக்கத்தை ஏற்படுத்தப்பட்டதை எண்ணியே வருத்தப்பட்டுக் கொள்வோராகவும் இருக்கலாம்.

இவை உடல் ரீதியாக தாக்கத்தை விட உள ரீதியாகத் துன்புறுத்தப்படும் செயல்களே. இவை, அதிக உள வடுக்களை ஏற்படுத்திவிடும். அந்த நிகழ்வு, அந்த வார்த்தை, அந்தக் காட்சி மனதில் ஏற்படும்போதெல்லாம் மனச்சோர்வு, தலைவிறைப்பு, உடல் நோய், விரக்தி, நெருக்கீடுகளை ஏற்படுத்தி தமது மகிழ்வான வாழ்வை சிதைத்து விடுகிறது. இவற்றை இனம் காணும்போது, உணரப்படும் போது இதனை எதிர்கொள்ளல் மிகவும் முக்கியமானதாகும்.

துன்புறுத்துபவர்கள் பற்றியே மீண்டும் மீண்டும் சிந்தித்து எம் உள, உடல் நலத்தை சீரழிக்கும்போது அல்லது தமக்கு எதிராக நடப்பவரை எண்ணிக் கோபப்படும் போது கூட எமது சுகங்கள், மகிழ்ச்சிகளே அதிகம் சிதைவடைகிறது. இதனால்கூட தம்மை செயலிழக்க திட்டமிடுகிறார்கள் என்பதனை உணர்ந்து எதிர்கொள்ளல் மூலம் எம்மை பலமுள்ளவராக்க முனைபவரே நிறைவான வாழ்வை அனுபவிக்க முடியும்.

எம் மனவலிமைக்கு நாமே பொறுப்பாளிகள். எவரது வார்த்தையும், செயல்களும் நம் மனதை சிதைக்கவிடாது காத்தல் மூலம் நமக்கெதிராக செயல்படும் எந்த செயல்களையும் வென்றுவிட முடியும் என்ற மனத்திடம் எம்மிடம் இருக்கும்வரை எம்மை எவரும் குழப்பிவிட முடியாது. 'துன்பநிலையை அனுபவியாதவன், தன்னையோ தன் உயர் பண்புகளையோ ஒருபோதும் உணர முடியாது' என்பார் டேவிட் மேல்லட் என்ற அறிஞர்.

அதனால் துன்பத்தை வெல்ல முயல்பவர் நிறைவை, திருப்தியை அடைந்து இருப்பதற்கு ஏற்ற மனப்பக்குவம் எமது எதிர்கொள்ளலிலேயே தங்கியுள்ளது என்பதை உணர்ந்து செயல்படலே வாழ்வின் மகிழ்வுக்கு வழியாகும்.

- 'எப்படிப் படிச்சாலும் ஆங்கிலமும், கணிதமும் எங்கடயளுக்கு ஏறாது'
- 'பரீட்சையில் எங்கடயள் 40 ,50 க்குள்ள தானே எடுக்குதுகள்'
- 'பக்கத்து வீட்ட பாருங்க எப்படி இருந்தாலும் அதுகள் எல்லாம் நல்லாப் படிச்சி டுதுகள்'
- 'அதுகளுக்கு என்ன, எல்லாம் கிடைக்குது எங்களுக்கு ஆர் இருக்கினம்'
- 'ஏன், இவ்வளவு சனத்தைக் கூட்டிக் கொண்டாட வேணுமோ? சும்மாதானே காச நெருப்பாக் கொட்டி கொண்டாடுதுகள்'
- 'எல்லாம் எங்களுக்குத்தானே தொல்லையாய் வருகுது'
- 'என்ன இருந்தாலும் அதுகளைத் தானே எல்லாரும் பெரிசா சொல்லினம்'

இருப்பதை ஏற்று நிறைவுகாண முடியாமையும், ஏனையோருடன் ஒப்பிட்டு தம் திருப்தியான மகிழ்வைத் தொலைத்து விடுவதும், மனதில் அமைதியை, நிறைவை, திருப்தியை அனுபவிக்கமுடியாது நோய்க்கு அடிமையாவோரே இன்று அதிகம்.

தம் நோயினை இனம்கண்டு கொண்டால் அதிலிருந்து விடுபடலும் இலகுவானதாய் இருக்கும். மருந்தில்லா மருத்துவ வழிகள் பல உண்டு. இதனை அறிந்துகொண்டாலும் செயல்படுத்துவதில் அக்கறைப்படாததாலே அதிக மன நோய்களை காவித்திரிவோரும் அதிகரித்து வருகிறார்கள். இவை சகல மட்டத்திலும் உண்டு. இதனை ஒரு நோய் என்பதை இனம் காணாது சுமந்து திரிவோர் படித்தோர் முதல் பாமரர்வரை அலட்சியப்படுத்துவதால் மனநோய் பல வடிவங்களாய் மாறி ஆக்ரோஷ வெளிப்பாடுகள் வன்முறையாக வடிவெடுப்பதும் கண்கூடு.

வாழ்வின் மகிழ்விற்கு எமது மனத்திடனை எதிர்கொள்ளலால் வலுப்படுத்தலாம். தமது மன ஒன்றிப்பை பிறரால் மாற்றப்பட, திசை திருப்பப்பட, குழப்பத்தை ஏற்படுத்த முனையும் போது எதிர்கொள்ள முடியாதவர்கள் தம்மையே இழந்து விடுகிறார்கள். மகிழ்வான வாழ்வு வாழ யாருக்குத்தான் ஆசை இல்லை. அதற்கு நாம் முயலவேண்டும். இவற்றை எதிர்கொள்வதற்கு தம் மனதை ஒருநிலைப்படுத்தவும், கட்டுப்படுத்தவும், தேவையற்ற விடயங்களைச் சுமக்காது நல்லவற்றில் நிறைவு கண்டு திருப்திகொள்ளும் மனப்பக்குவம் ஏற்படவும் பயிற்சிகள் பலவுண்டு. இவற்றை சிறியநேரம் ஒதுக்கி முயன்று பாருங்கள்.

- தியான வழிமுறைகள்
- உடற்பயிற்சிகள்
- இசையை இரசித்தல்
- நல் உரையாடலும், உறவாடலும்
- தன்நிலை உணருதல்
- தன் சூழலை ஏற்றுக்கொள்ளல்
- குடும்ப வாழ்வில் இசைவாக்கம் பெறுதல்

போன்ற நடைமுறைப் பயிற்சிகள் வழியாக எதிர்கொள்ளலே வாழ்வின் மகிழ்வுக்கு வழிகளாகும்.

நல்லவற்றைத் தேடி அறிந்து பெறுதல், சிந்தனை வளர்ச்சிக்கு ஏற்றதான வாசிப்புக்கள், கருத்துப் பரிமாற்றங்கள், கருத்தரங்குகளிற் கலந்துகொள்வதோடு நல்லதை எண்ணி நல்லதைச் செய்து நல்லுறவைப் பேணி நலமுடன் வாழ்வதே வாழ்வின் மகிழ்ச்சியின் வெற்றியாகும்.

செ. யோசப் பாலா

# இலங்கை இராணுவத்திற்கு இந்தியா இரகசிய உதவி

## தமிழகத்தின் தினமலர் நாளிதழ் தெரிவிப்பு

(சென்னை)

இலங்கை இராணுவத்திற்கு இந்திய மத்திய அரசு இரகசியமாக உதவி வருவதாக தமிழகத்திலிருந்து வெளிவரும் தினமலர் நாளிதழ் தகவல் வெளியிட்டுள்ளது.

அதன் விபரம் வருமாறு,

இலங்கையில் உள் நாட்டுப் போர் வலுத்து வரும் நிலையில் இலங்கை அரசின் பக்கம் இந்தியா மெல்ல மெல்ல சாயத்துவங்கியுள்ளது. இலங்கையில் உள்ள இந்திய நிறுவனங்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கும் வகையில் இலங்கை இராணுவத்துக்கு இந்தியா உதவி அளிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை அமைதி முயற்சி பலன் தராததால் மீண்டும் உள் நாட்டுப் போர் ஏற்பட்டுள்ளது. இலங்கை இராணுவம் விடுதலைப் புலிகளும் கடும் போரில் ஈடுபட்டுள்ளனர். இரு தரப்புக்கும் இடையே சம இடைவெளியை கொண்டுவந்த இந்தியா தற்போது இலங்கை இராணுவத்துக்கு பக்கபலமாக செயல்பட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

இலங்கையில் அமைதி திரும்பும் நடவடிக்கைகளில் சில வெளிநாடுகள் ஈடுபடுவது ஓரளவு மட்டுமே பயன் தரும் என்பதை உலகநாடுகளும் உணர்ந்துள்ளன. நோர்வே எடுத்த அமைதி முயற்சி தோல்வியடைந்ததும் இதனால் தான். இலங்கைப் பிரச்சினையில் எந்தவிதத்திலும் தலையிடாமல் இருந்தது இந்தியா. ஆனால் சமீபகாலமாக இந்நிலையில் மாற்றம் ஏற்படத் தொடங்கியுள்ளது.

இலங்கை இராணுவத்துக்கு இந்திய ஆயுதங்கள் விற்பனை செய்யாது என்று அறிவித்த இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் நாராயணன் பாக் மற்றும் சீனாவிடம் இலங்கை ஆயுதம் வாங்குவது கூடாது என்று பகிரங்கமாக கருத்து தெரிவித்தது, பலரையும் வியப்படையச் செய்தது.

டில்லியிலும் சென்னையிலும் தமிழக முதல்வர் கருணாநிதியை சந்தித்து இலங்கை பிரச்சினை தொடர்பாக பேசிய நாராயணன், விடுதலைப் புலிகள் அமைப்பு ஒரு பயங்கரவாத அமைப்புதான் என்பதை தெளிவுபடுத்தினார். புலிகளின் கடற்புலி பிரிவினரின் கடற்புலிகள் மற்றும் அவர்களிடம் உள்ள போர் விமானங்களால் இந்தியாவுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்றும் பகிரங்கமாக கூறினார்.

இலங்கையில் உள் நாட்டு போர் விவகாரத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரரும் அந்நாட்டு பாதுகாப்பு செயலருமான கோத்தபாய ராஜபக்ஷ கவனித்து வருகிறார். சில நாட்களுக்கு முன் துருக்கியில் இருந்து இந்தியா வந்த இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இந்திய பாதுகாப்புத்துறை மற்றும் இராணுவத்துறை அதிகாரிகளைச் சந்தித்துப் பேசினார். தற்போதைய நிலையில் இலங்கையின் தேவைகளையும் அதிகாரிகளிடம் கோடிட்டுக் காட்டினார்.

வேறு எந்த நாட்டையும் விட இந்தியாவையே சார்ந்திருக்க இலங்கை விரும்புவது தெளிவானது. இந்தியா கூறும் எந்த ஆலோசனையையும் ஏற்க இலங்கை தயாராக இருக்கிறது. இந்தியாவின் ஆதரவைப் பெறுவதற்கு ராஜதந்திர முறையில் இலங்கை செயல்பட்டு இந்தியாவின் மிகப் பெரிய எரிபொருள் நிறுவனமான இந்தியன் ஒயில் கோப்பரேஷனை இலங்கையில் செயல்பட அனுமதித்தது. இலங்கையில்பலபெற்றோல் நிலையங்களையும் இந்த நிறுவனம் நடத்தி வருகிறது.

இந்தியாவின் மற்றொரு மிகப்பெரிய பொதுத்துறை நிறுவனம் தேசிய அனல் மின் கழகம்! இந்த நிறுவனமும் இலங்கையில் பல இடங்களில் மின் உற்பத்தி நிலையங்களை அமைக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது. தமிழர்கள் அதிகம் வசிக்கும் திருகோணமலைப் பகுதியில் மிகப் பெரிய சேமிப்பு கிடங்கை அமைக்க இந்தியன் ஒயில் கோப்பரேஷன் திட்டமிட்டுள்ளது. சர்வதேச கடல் எல்லையில் தினமும் 150 கப்பல்கள் வரை ஐரோப்பாவில் இருந்து சிங்கப்பூர் வரை செல்கின்றன. இந்தக் கப்பல்களுக்கு வழியில் எரிபொருளை நிரப்ப சரியான இடவசதி இல்லை. இந்தக் கப்பல்களுக்கு எரிபொருள்விநியோகம் செய்ய திருகோணமலை துறைமுகத்தில் வசதிகளை ஏற்படுத்தவும் இந்தியன் ஒயில் கோப்பரேஷன் திட்டமிட்டுள்ளது. இதற்காக 200 கோடி ரூபாய் முதலீடு செய்ய உள்ளது. திருகோணமலையில் தேசிய அனல்மின் கழகமும் இலங்கை மின்சார சபையும் இணைந்து 500 மெகாவாட் மின்சார உற்பத்தி செய்யும் நிலையத்தை அமைக்க திட்டமிட்டுள்ளது. சம்பூர் என்ற இடம் இதற்காக தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்த இடத்தை புலிகள் சமீபத்தில் தாக்கினர்.

விடுதலைப் புலிகளிடம் போர் விமானங்கள் உள்ளன. கப்பல்களை தாக்கி அழிக்கும் கடற்புலிகள் பிரிவும் உள்ளன. அவற்றைக் கட்டுப்படுத்தும் சக்தி இலங்கை இராணுவத்திடம் இல்லை. இந்திய இராணுவமும் முழுவீச்சில் இலங்கைக்கு உதவினால் மட்டுமே புலிகளின் தாக்குதலை கட்டுப்படுத்த முடியும். இந்திய நிறுவனங்களின் பாதுகாப்புக்கும் உறுதி அளிக்க முடியும் என்பதே இலங்கையின் வியூகம்.

இந்தியன் ஒயில் கோப்பரேஷன் மற்றும் இலங்கையில் அமைய இருக்கும் இந்திய நிறுவனங்களின் பாதுகாப்புக்கு இந்தியாவே பொறுப்பேற்க வேண்டும் என இலங்கை அரசு கூறியுள்ளது. அந்த அடிப்படையில் இலங்கைக்கு உதவ இந்தியா முன்வந்துள்ளது. புலிகளின் போர் விமானங்களை கண்டுபிடிக்கும் நவீன ராடர்கள், விமான எதிர்ப்பு பீரங்கிகள் போன்றவற்றை இலங்கைக்கு இந்தியா விரைவில் வழங்கும் எனத் தெரிகிறது. இதற்கு முன் இலங்கையிடம் அழிவு ஏற்படுத்தாத இராணுவ தளபாடங்கள் மட்டுமே தரமுடியும் என இந்தியா கூறியிருந்தது. இதனால் பாக் மற்றும் சீனாவிடம் ஆயுதங்கள் வாங்கியது இலங்கை. இது இந்தியாவுக்கு அதிருப்தி ஏற்படுத்தும் என்பது இலங்கைக்கு தெரியும். ஆனாலும் இராணுவத்துக்கு போதுமான ஆயுதங்கள் இல்லாத நிலையில் வேறு வழியின்றி இந் நிலைக்கு இலங்கை தள்ளப்பட்டுள்ளது.

எனவே பாக் மற்றும் சீனாவிடம் இலங்கை உதவி பெறுவதை நிறுத்த வேண்டுமானால் இந்தியா தான் உதவியாக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. எனவே இரகசியமான வகையில் இலங்கை இராணுவத்துக்கு உதவும் நிலைக்கு இந்தியா தள்ளப்பட்டுள்ளது. (ந-5)

## காக்கும் எங்கள் கண்ணலிங்கேசர்



கண்ணை இமை காப்பதுபோல்
காக்கு மெங்கள் கண்ணலிங்கேசர்
எண்ண மெல்லாம் நிறைந்து விட்ட
எங்க ளருள் அன்னையுடன்
மன்னனாணை கொண்டு அழிக்கவந்த
மாந்தர்தமை விந்தையாக நீக்கிவிட்டு
திண்ணமுடன் கேட்ட குறைகள்
தெக்கணப்பாய்ப் பதியில் தீர்ப்பான்
வண்ணமுடன் வாழவைக்கும் ஈசனை
வழுத்தி நிதம் போற்றிடுவோம்!

-சி. சிவா

# இன்று ஒரு தகவல்

## நாள் காட்டி

(நேற்றைய தொடர்ச்சி)

அந்தக் காலத்தில் ரோமானியர்கள் கணக்குப்படி ஆண் டுக்கு 10 மாதங்கள்தான். "மார்ச்" தான் முதல் மாதம். ரோமாபுரியை உருவாக்கியதாகக் கூறப்படும் ரோமுலஸ், போர்க்கடவுளாகிய மார்சின் வழிவந்தவன் என்ற நம்பிக்கையிலே முதல் மாதத்துக்கு அப்படிப் பெயர் வைத்தார்கள்.

ஏப்ரிலிஸ் (APRILIS) என்றால் இரண்டாவது என்று அர்த்தம். அதை இரண்டாவது மாதத்துக்கு வைத்தார்கள். "மொர்க்குரி" என்னும் கடவுளின் தாயாகிய மய்யாவின் பெயராலே "மே"

ஜுபிடர் கடவுளின் மனைவி ஜுனோவின் பெய ராலே நான்காம் மாதத்துக்குப் பெயர் "ஜுன்" மற்ற மாதங்கள்... அவற்றின் வரிசையைக் குறிக்கிற லத்தீன் எண் பெயர் பிரகாரம் குறிப்பிட்டார்கள்.

ஐந்தாம் மாதம் - குவின்க்வே (Quinque)
குவிண்டிலிஸ் (Quintiles)
ஆறாம் மாதம் - செக்ஸ் (Sex)
செக்ஸ்டிலிஸ் (Sextilis)
ஏழாம் மாதம் - செப்தெம் (Septem)
செப்தெம்பர்
எட்டாம் மாதம் - அக்டோ (Octo)
அக்டோபர்
ஒன்பதாம் மாதம் - நவெம் (Novem)
நவம்பர்

பத்தாவது மாதம் - தெசம (Decem) என்றால் பத்தாவது அதுதான் தெசெம்பர்.

பிற்காலத்திலே இன்னும் இரண்டு மாதங்களைச் சேர்ந்தார்களாம். ஜெனுஸ் என்கிற காவல் தெய்வத்தின் பெயர் சூட்டப்பட்ட பதினோராம் மாதம் "ஜெனுவாரியுஸ்" (JANUARIUS)

"ஃபெப்ருவாரியஸ் என்னும் இறப்புக் கடவுளின் பெயராலே பன்னிரெண்டாம் மாதத்துக்கு ஃபெப்ருவாரியுஸ் (Februarius) என்று பெயர் வைத்தார்கள்.

இந்த இரண்டையும் ஆண்டின் தொடக்கத்துக்குக் கொண்டு போனவர் ஜுலியஸ் சீசர். இதனாலே என்ன நடந்தது? ஏழாம் மாதம் பொருள்படுகிற செப்தெம்பர் மாதம் ஒன்பதாம் இடத்துக்கும் போய்விட்டது.

அதே மாதிரி மற்ற மாதங்களுக்கும் பேர் பொருந்தாமல் போச்சு. ஜுலியஸ் சீசர் இறந்த பிறகு... அவர் நினைவைப் போற்றுகிற வகையிலே அவர் பிறந்த "குவிண்டிலிஸ்" என்கிற மாதத்தின் பெயரை "ஜுலை" என்று மாற்றினார்கள்.

அவருக்குப் பின் ரோமானிய மாமன்னராய் ஆட்சி புரிந்தவர் அவருடைய உறவினர் அகஸ்டஸ். இவருடைய பெயர் "செக்ஸ்டிலிஸ்" மாதத்துக்குச் சூட்டப்பட்டது. அதே தான் ஆகஸ்ட்.

சீசரின் மாதத்துக்கு 31 நாள் இருந்ததனாலே அவருக்கு இணையானவர் அகஸ்டஸ் என்பதை எடுத்துக் காட்டுவதற்காக பெப்ரவரியிலிருந்து ஒருநாளை எடுத்து ஆகஸ்டிலே சேர்த்து அதற்கும் 31 நாள் ஆக்கி விட்டார்கள். அதனாலே ஜுலை, ஆகஸ்ட் மாதங்களுக்கு - அவை அடுத்தடுத்து இருந்தாலும் - 31 நாள் ஆகியது.

இப்படித்தான் காலம் மாறிக்கொண்டு இருக்கிறது என்பது இல்லை. கலண்டரும் மாறிக்கொண்டு தான் இருக்கிறது... ஓர் ஆள் ஓர் ஆட்டுக்குட்டியைப் பிடித்து வந்தான்.

அவன் சொன்னான்... "நீங்கள் சொல்வதைப் பார்த்தால் மனிதர்கள் தான் மாதத்தை மாற்றிக் கொண்டு இருந்தார்கள்... என் ஆட்டுக்குட்டி அப்படி இல்லீங்க... எப்பொழுது கேட்டாலும் மாற்றாமலே மாதத்தின் பெயரைச் சொல்கிறது..."

அது எப்படி என்றேன் ஆச்சரியத்துடன் இதோ பாருங்கள் என்று சொன்ன அவன் "கொஞ்சம் பொறுங்கள்... நான் சொல்லச் சொல்கிறேன்" என்றான். அந்த ஆட்டுக்குட்டியின் காதோரமாகப் போய்... "ஏப்ரலுக்கு அடுத்த மாதம் என்ன?" என்று கேட்டான் அந்த ஆட்டுக்குட்டி "மே" என்று கத்தியது.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# வெற்றிக் கனியை தட்டிக்கொள்வது எப்படி?

## வெற்றிக்கு வித்திடும் ஆளுமை அபிவிருத்தி

ஆளுமை அபிவிருத்தி என்றால் தோற்றம் சம்பந்தப்பட்டது என அநேகர் கருதுகின்றார்கள். முகம் பளிச்சென்று ஆவது மட்டும் நல்ல ஆளுமை என்பதில்லை. அது புறத்தோற்றத்திற்கானது.

பேசுவதற்கும் தன்னம்பிக்கையை வளர்ப்பதற்கும் பயிற்சி என்பது அவசியமா என்று அலட்சியமாக இருந்த காலம் மலையேறிவிட்டது. சரியான தொனியில் சரியான நேரத்தில் சரியான அணுகுமுறை யோடு பேச முடிகின்றவர்கள் மட்டுமே இந்த உலகில் ஜெயிக்கமுடியும் என்ற நிலை தோன்றியுள்ளது.

நாலுபேர் முன்னால் எப்படிப் பேசுவது? கூச்சமாக உள்ளது. சபைநாகரிகம் தெரியவில்லை என்று கவலைப்படுபவர் நீங்கள் எனின், இக்கவலைக்கு முற்றுப்புள்ளிவைத்துவிட முடியும் மனப்பயிற்சியின் மூலம் உங்களை நீங்களே மாற்றிவிட முடியும்.

உள்ளே பொங்கி எழுகிறது சாதிக்கும் ஆவல். மேகமாய் அலைகின்றன வெற்றி பற்றிய உச்சபட்சக் கனவுகள், வானம் என விரிந்துகிடக்கின்றது. உச்சநிலைக்கு உயர வேண்டும் என்ற ஆசை இந்நிலையில் சாதிப்பதற்கும் நாம் நம்மை தயார்ப் படுத்துவது அவசியம்.

ஒருவருடன் பேசுகின்றீர்கள். அவர்க்கு உடன்பாடு இல்லாத ஒரு விடயத்தை வாழைப்பழத்தில் ஊசி இறக்குவதுபோல் வலிக்காமல் ஏற்றுக்கொள்ள வைப்பது உங்களால் சாத்தியமென்றால் எண்ணற்ற நட்சத்திரங்களாக போட்டியாளர்கள் நிறைந்த வானில் நிலவாக உங்களால் ஒளிவீசிப் பிரகாசிக்க முடியும்.

சரியாகப் பேசத் தெரியாதவர்கள் கடும் உழைப்பாளிகளாக இருந்தாலும் அவர்கள் வெற்றி நிச்சயம் தாமதப்படும். சொல்ல நினைப்பதை எதிரில் இருப்பவர்கள் ஏற்றுக்கொள்ளும்படியாக தெளிவாக பேசுகின்ற வித்தையை கற்றவரை யாராலும் புறக்கணிக்க முடியாது. ஆளுமை அபிவிருத்தியில் முதலில் சொல்லித்தருவது யாரிடம் எப்படி பேசுவது என்பதைத்தான். வாயுள்ள பிள்ளை பிழைக்கும் என்பதை விட வாயுள்ள பிள்ளை சாதிக்கும் என்பதே சரி.

வார்த்தையை தேர்ந்தெடுத்து உச்சரிக்கும் நேர்த்தி முகபாவம், அங்க அசைவுகள் (Body Language) தொடர்பாடல் திறமை, எல்லாம் ஒரு செயலை சாதனைக்கு இட்டுச் செல்லும்.

தொடர்பாடல் கலை என்று மேலைநாடுகள் இந்த ஆற்றலை வெகுவாக வளர்த்துக்கொள்வதில் அக்கறை காட்டுகின்றன. நடைமுறை வாழ்க்கையில் நாம் இந்தக்கலையில் அதிகம் கவனம் செலுத்துவது இல்லை. சொல்லவந்த விஷயத்தைப் பிறர் புரிந்து கொள்ளும்படி சொல்வது உன்னதமான கலை.

கோபம் உங்களை அநாகரியமாக பேசவைத்து பதற்றத்தை ஏற்படுத்தி மற்றவர் முன் உங்கள் மதிப்பையும் ஆளுமையும் குறைக்கும். எமது உணர்வுகள் எமது ஆளுமையை தீர்மானிப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றன. நம்மில் அநேகருக்கு எந்த நேரத்தில் எதற்காக கோபம் வந்துவிடும் என்றே கண்டுபிடிக்க முடிவதில்லை. சூழ்நிலை மறந்து அநாகரிகமாக நடந்துகொள்கின்றோம்.

எங்குமே நம்மைக் தொந்தரவு செய்கின்றவர்கள் நிறைந்திருக்கின்றார்கள். அவர்களை சமாளித்து எப்படி உயரப் போகின்றோம் என்பதுதான் சவால். வம்பளப்பது எவ்வளவு அசிங்கமோ அதே போலத்தான் தன்னைப் பற்றிய வதந்திகளுக்கு செவிசாய்ப்பதும். நல்ல ஆளுமைமிக்கவர்கள் ஒருபோதும் இவற்றால் சோர்ந்து போவது இல்லை.

ஒருவரின் வளர்ச்சிக்கு தன்னம்பிக்கை காரணம் அவரே தான். ஆரோக்கியமான சிரிப்பு, அளவில்லாத அன்பு, எல்லோரையும் ஏற்றுக்கொள்ளும் பக்குவம், ஆக்கபூர்வமான சிந்தனை இவையே நல்ல ஆளுமைக்கு அடிப்படையாக அமைபவை. ஆளுமை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமானது சாதிப்பதற்கான பயிற்சியை அளிக்கின்றது. மேற்படி பயிற்சிப் பட்டறை ஒன்று யாழ்.நகரில் நடைபெற இருக்கிறது. மேலதிக விபரங்களுக்கு "(EUREKA) தொ. பே.இல 0773164399 தொடர்பினை ஏற்படுத்தி அறிந்து கொள்ளலாம்.

# உலக அரங்கில் ஒலிக்கும் உரிமைக்குரல்

## காலத்தால் நினைவுகூரப்படும்

### சு.ப.தமிழ்ச்செல்வன்

"தேசவிடுதலைப் போராட்டங்களுக்கு உந்து சக்தியாக விளங்கும் தேசப்பற்றானது காலத்திற்கும் இடத்திற்கும் அப்பால் புவியியல் எல்லைகளுக்கு அப்பால் ஆட்கொண்டு நிற்கும் ஒரு அபூர்வமான சக்தி" என்ற தமிழீழத் தேசியத் தலைவரின் எண்ணத்திற்கு செயல்வடிவம் கொடுப்பது போல தாயக தேசத்தின் மீதான பற்றுதலை மனதிலே தாங்கிக் கொண்டு அதனது விடிவிற்காய் அயராது உழைக்கின்ற எம் உறவுகளுக்கு வணக்கங்கள்.

"வெல்க தமிழ்" எனும் எழுச்சிப் பேரணியில் பங்கு கொண்டு தாயக பாசத்துடன் தேசத்தின் விடுதலைக்காக, உலக அரங்கில் நீங்கள் எழுப்பிவரும் உரிமைக்குரல் ஒடுக்கப்பட எமது மக்களிற்கு தெம்பையும் திடத்தையும் கொடுத்து நிற்கிறது. தேசியத் தலைமைக்கு மகிழ்ச்சியையும் பெருமிதத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

எந்த இனமுமே சம்பாதித்திராத அரும்பெரும் சொத்தாகிய உங்களின் பேராதரவும், தீராத விடுதலை முனைப்புமே இன்று தாயகத்தில் பெரும் வெற்றிகளை குவித்து தமிழினம் வீறுநடைபோட வைத்திருக்கிறது என்பதனை யாருமே மறுத்துவிட முடியாது.

தாயகத்திலிருந்து வெகு தொலைவு சென்ற துயரம் மனதை அடைக்கின்ற போதும், தாங்கமுடியாத கலாசார பண்பாட்டுச் சுமைகள் ஒரு தோளிலும் தாயகத்து உறவு களின் வாழ்வாதாரத்தை மறு தோளிலுமாக சுமந்து கொண்டு மண்ணின் விடுதலை நோக்கி உங்களது தார்மீக ஆரவை நல்கும் அரும்பணி காலத்தால் நினைவுகூரப்படும்.

தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்படுகின்ற போதெல்லாம் பொங்கியெழுந்து உலக மனச்சாட்சியின் கதவுகளை தட்டி நியாயம் கேட்கும் உங்கள் தாயகப்பற்றை மெச்சுகின்றோம் என தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார். கடந்த திங்கட்கிழமை ஜெனீவாவில் நடைபெற்ற "வெல்க தமிழ்" நிகழ்வுக்கான தனது வாழ்த்துச் செய்தியிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (அ)

# இராசிபலன்

14.06.2007
(வைகாசி 31, வியாழக்கிழமை)
சதுர்த்தசி முற்பகல் 11.29 மணிவரை
ரோகினி முன்னிரவு 10.49 மணிவரை
இராகுகாலம் 01.23-02.53 மணிவரை
சுபநேரம் 07.23-08.53 மணிவரை
அமாவாஸ விரதம்

**மேடம்:-** அமைதிக்குறைவு, முயற்சி தாமதமாகும், விவாதம், பணவிரயம்.

**இடபம்:-** வெகுமானம், தெய்வசிந்தை, புதிய முயற்சி, மாதர்நட்பு.

**மிதுனம்:-** சோம்பல்நிலை, பிறருக்கு உதவுதல், காரிய அலைச்சல், சுபசெலவு.

**கடகம்:-** நண்பர்கள் சந்திப்பு, மனமகிழ்ச்சி, தடைப்பட்ட காரியம் கைகூடும், சயனசுகம்.

**சிங்கம்:-** நன்கொடை, இனசனத் தொடர்பு, இஷ்ட சித்தி, மேன்மை.

**கன்னி:-** உத்தியோக பங்கம், குடும்பக்கவலை, பொருள்விரயம், ரோகநிலை.

**துலாம்:-** எதிர்பாராத மனஸ்தாபம், பணக்குறைவு, காரிய தாமதம், போசனசுகம்.

**விருச்சிகம்:-** சௌபாக்கியம், கலந்துரையாடல், காரிய நன்மை, புதிய பொருள்சேர்க்கை.

**தனுசு:-** நோய் குணமடைதல், தொழில் விருத்தி, தடைப்பட்ட காரியம் கைகூடும், தனவருவாய்.

**மகரம்:-** தாழ்ந்த சுபாவம், காரிய இடையூறு, பூர்வ புண்ணிய கருமம், வியாதி.

**கும்பம்:-** தன்னம்பிக்கைக்குறைவு, தாய்வழி உறவு, ரோகபயம், வேலையில் ஆர்வம்.

**மீனம்:-** மாதர்நட்பு, காரிய சித்தி, பொருள் சேர்க்கை, சகோதரர்வழி நன்மை.

-வளவன்

# விளையாட்டுவிழா

யாழ். பாலர் கல்விக் கழக நிர்வாகத்திலுள்ள நாவலர் பாலர் சோலையின் 15வது வருடாந்த விளையாட்டு விழா 2007 பாடசாலை மைதானத்தில் இன்று வியாழக்கிழமை பி.ப.1.00 மணியளவில் பாடசாலை ஆசிரியை செல்வி சுபாசினி பால சுப்பிரமணியத்தின் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக சமூக அபிவிருத்தி மன்றத் தலைவர் திருமதி நவநீதம் ஜெகதீசனும், சிறப்பு விருந்தினராக சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரனும், கௌரவ விருந்தினராக திருமதி தெ.இரத்தினகோபால், செல்வி சி. கார்த்தியாயினி ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (அ)

# விஞ்ஞான வினாடி வினாப் போட்டி

யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தினால் 16ஆம் திகதி சனிக்கிழமை அன்று நடாத்தப்படவிருந்த தரம் 6 முதல் 11 வரையிலான தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல விஞ்ஞான வினாடி வினாப் போட்டி தவிர்க்கமுடியாத காரணங்களினால் 2007.06.23ற்கு (சனிக்கிழமை) பிற்போடப்பட்டுள்ளதுடன் முன்னர் அறிவிக்கப்பட்ட நிலையங்களிலே நடைபெறுமெனவும் யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் அறிவித்துள்ளார். (அ)

பொய்யனுக்குக் கிடைக்கும் தண்டனை அவன் உண்மையைச் சொல்லும்போதும் அதை யாரும் நம்பாதிருத்தல்.
—இஸ்ரேலி

வலம்புரி

## நாட்டின் ஜனாதிபதி மகிந்தவா? கோத்தபாயவா?

கொழும்பிலுள்ள விடுதிகளிலிருந்து வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களை வெளியேற்றியது நியாயமான செயல் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கூறியுள்ளார்.

கொழும்பிலுள்ள விடுதிகளிலிருந்து தமிழ் மக்களை வெளியேற்றியமைக்காகத் தமிழ் மக்களிடம் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க பகிரங்க மன்னிப்புக் கேட்டிருந்த நிலையில்,

பாதுகாப்பு அமைச்சின்செயலாளரும் ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷவின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்ஷ, தமிழ் மக்களை வெளியேற்றியது நியாயமான செயல் என கூறியிருப்பது இலங்கையின் அரசியல் தலைமை அதிகாரத்தில் யார் இருக்கிறார் என்ற சந்தேகத்தை நாட்டு மக்களிடையே ஏற்படுத்தியுள்ளது.

கொழும்பிலுள்ள விடுதிகளில் தங்கியிருந்த வடக்குக் கிழக்குத் தமிழ் மக்கள் கடந்த வியாழக்கிழமை அதிகாலைவேளை பொலிஸாரினால் பஸ்களில் ஏற்றப்பட்டு வவுனியா மற்றும் மட்டக்களப்பு ஆகிய இடங்களில் இறக்கிவிடப்பட்டனர்.

இந்த நடவடிக்கையைத் தொடர்ந்து தென் பகுதியில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றதுடன் சர்வதேசத்தின் கண்டனங்களும் தாராளமாகக் குவிந்தன.

அதேநேரம் தமிழ் மக்களை வெளியேற்றுவதற்கு உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவையும் பிறப்பித்திருந்தது.

இதனால் ஜனாதிபதிக்கும் அரசுக்கும் ஏற்பட்ட இக்கட்டான சூழ்நிலையிலிருந்து விடுபடுவதற்குத் தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கேட்பதே ஒரே வழியென்ற முடிபு எடுக்கப்பட்டு அந்தப் பணி பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க மூலமாக நிறைவேற்றப்பட்டது.

இதுபோன்ற தவறுகள் இனிமேல் இடம்பெற மாட்டாது என்ற உத்தரவாதத்தையும் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க முன்வைத்தார்.

இவையெல்லாம் நடந்துமுடிந்து சில தினங்கள் கடந்த பின்னர், தமிழ் மக்களை வெளியேற்றியது நியாயமானது என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கூறியிருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்துவதாகும்.

அதாவது பொறுப்பு வாய்ந்த பதவியிலிருக்கும்ஒருவர் தமிழ் மக்களை வெளியேற்றியது நியாயமானது என கூறியதிலிருந்து, அவரே இந்த நாடகத்தை அரங்கேற்றியுள்ளார் என்ற முடிபுக்கு நாம் வரலாம்.

தனது காரியத்தை நியாயப்படுத்தும் அவர், கொழும்பில் தங்கியிருந்த தமிழ் மக்களைக் கைது செய்து தடுத்து வைக்காமல் அவர்களை வெளியேற்றியமை நல்ல காரியம் என்றவாறு கதையளக்கிறார்.

அப்படியானால் எந்த விளக்கமும் விசாரணையுமின்றி தமிழ் மக்களைக் கைது செய்து சிறையில் அடைத்து வைக்க முடியும் என்பது அவரின் நிலைப்பாடு.

இதனூடாக இலங்கையில் தமிழ் மக்களுக்கு இருக்கக் கூடிய உரிமைபற்றி உலக நாடுகள் குறிப்பிட்டுக் கொள்ள முடியும். அத்துடன் தமிழ் மக்களைவெளியேற்றியமைக்கு உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை பிறப்பித்துள்ள நிலையில் தமிழ் மக்கள் வெளியேற்றப்பட்டமை நியாயமானது என கோத்தபாய கூறுவதிலிருந்து நீதிமன்றத்தை அவமதிக்கும் செயலும் நடந்தேறுகின்றது.

ஒட்டுமொத்தத்தில் நாட்டின் ஜனாதிபதி மகிந்தவா? கோத்தபாயவா? என்பது புரியாத புதிராகவேயுள்ளது.

# இலங்கை அரசைக் கண்டித்து சென்னையில் ஆர்ப்பாட்டம்

(சென்னை)

இலங்கை வாழ் தமிழர்களுக்கு எதிராக அரசின் நடவடிக்கைகளைக் கண்டித்து விடுதலைச் சிறுத்தைக் கட்சி சார்பில் சென்னை கலெக்டர் அலுவலகம் அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது.

ஆர்ப்பாட்டத்தில் தொல் திருமாவளவன் கண்டனக் கோஷங்களை எழுப்பினார். பின்னர் அவர் பேசியதாவது,

கொழும்பு வாழ் தமிழர்களுக்கு எதிராகச் சிங்கள இன வெறியாட்டத்தைத் தடுத்து நிறுத்த வேண்டும். ஈழத் தமிழர்களுக்கு எதிராக இலங்கை அரசுக்கு எந்த உதவிகளையும் இந்திய அரசு செய்யக் கூடாது. பட்டினியால் வாடும் யாழ்ப்பாணத் தமிழர்களைக் காப்பாற்ற உணவு மற்றும் மருந்துகளை உடனடியாக அரசு அனுப்ப வேண்டும்.

பழ.நெடுமாறன் தலைமையில் சேகரிக்கப்பட்டுள்ள ஒரு கோடி மதிப்புள்ள உணவு மற்றும் மருந்துப் பொருள்களை செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்க மத்திய அரசு அனுமதி வழங்க வேண்டும்.

கொழும்பு நகரில் தமிழர்கள் வலுக்கட்டாயமாக வெளியேற்றுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தச் செயல் ஜனநாயக விரோதமானது. இந்தச் செயல் சர்வதேச அளவில் இலங்கைக்கு தலைகுனிவை ஏற்படுத்தியுள்ளது.

இந்தப் பாதக செயலுக்கு இலங்கைப் பிரதமர் மன்னிப்புக் கேட்டாலும் மன்னிக்கக் கூடாது. அமைதியாக வாழும் தமிழர்களை அடித்து விரட்டுவது காட்டு மிராண்டித்தனமானது. தமிழ்த் தேசிய உணர்வு உள்ளவர்கள் மற்றும் அனைத்துக் கட்சிகளுடன்இணைந்து இதைக் கண்டித்துப் போராட்டம் நடத்துவோம். முதலமைச்சரைச் சந்திக்கும்போது இந்தப் பிரச்சினையை வலியுறுத்துவேன். இவ்வாறு அவர் பேசினார். (ச-5)

# தமிழ் மக்களைக் கொழும்பிலிருந்து வெளியேற்றிய பாதுகாப்பு அமைச்சின் செயலர் பதவி விலக வேண்டும்

## ★ ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தல் ★

(கொழும்பு)

தலைநகர் கொழும்பில் உள்ள விடுதிகளிலிருந்து மக்களைப் பலவந்தமாக வெளியேற்றியதற்குப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவே காரணம் என்பதால் அவர் பதவி விலக வேண்டும் என்று பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர இது தொடர்பில் கொழும்பு ஊடகவியலாளர்களிடம் தெரிவித்ததாவது,

கடந்த மே மாதம் 31 ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சில் கோத்தபாய ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற கூட்டத்தின் பின்னர் மூத்த பொலிஸ் உதவி ஆணையாளரான மகிந்த பாலசூரியாவினால் சம்பந்தப்பட்ட காவல் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட சுற்று அறிக்கையில், விடுதிகளில் உள்ள தமிழ் மக்களை வெளியேற்றுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களை வெளியேற்றியது தொடர்பாக விசாரணைக்கு மகிந்த உத்தரவு பிறப்பித்துள்ள அதே சமயம், பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தமிழ் மக்களை வெளியேற்றியதற்கு மன்னிப்புக் கேட்டுள்ளார்.இது மிகச் சிறந்த நகைச்சுவை. தாங்கள் என்ன செய்கின்றோம் என்பது அரசுக்குத் தெரியவில்லை. பிரதமர் அவசரமாக விடுத்த மன்னிப்பின் மூலம் யாரைக் காப்பாற்ற முனைந்துள்ளார்? நாட்டின் வரலாற்றில் அரசு மன்னிப்புக் கோரியது இதுதான் முதல் தடவையாகும்.

தமிழ் மக்களின் இந்த வெளியேற்றத்திற்குக் காரணமானவர் மகிந்தவின் சகோதரராவார். எனவே அதற்குக் காரணமானவர்கள் மீது மகிந்த உண்மையிலேயே நடவடிக்கை எடுக்க விரும்பினால் முதலில் அவர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரைத்தான் பதவியிலிருந்து நீக்குவதன் மூலம் தண்டிக்க வேண்டும் என தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளதாவது,

பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தமிழ் மக்களை வெளியேற்றியதற்கு மன்னிப்புக் கேட்டுள்ளார். ஆனால் அரசின் மற்றுமொரு வலிமை மிக்க அமைச்சரான ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே, பிரதமரின் மன்னிப்பைக் கண்டித்துள்ளார்.

எனவே நாம் யாருடைய கூற்றைக் கருதுவது.இந்த நடவடிக்கைக்கு மூலகாரணமானவர்களையே அரசு தண்டிக்க வேண்டும். அதற்குத் துணை போனவர்களை அல்ல. பொலிஸ் அதிகாரிகள் மேலிடத்து உத்தரவுகளை நடைமுறைப்படுத்தியவர்கள். எனவே அவர்களைத் தண்டிப்பதில் அர்த்தமில்லை எனத் தெரிவித்தார். (ச-5)

# தமிழீழத்தை வழங்கிவிட்டு பிரதமர் மன்னிப்புக் கேட்பாரா?

## ரவி கருணாநாயக்க எம்.பி. சாடல்

தமிழ் மக்களை வெளியேற்றியமைக்காக பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க மன்னிப்புக் கோரியுள்ளார். அப்படியானால் தமிழீழத்தை வழங்கிவிட்டு அதற்கும் பிரதமர் மன்னிப்புக் கேட்பாரா? என்று அவரைக் கேட்கிறோம்.

அரசாங்கத்தைக் கொண்டு நடத்த முடியாவிட்டால் ஐக்கிய தேசியக் கட்சியிடம் ஒப்படைக்குமாறு கோரிக்கை விடுக்கின்றோம் என்று கட்சியின் கொழும்பு மாவட்ட எம்.பி. ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கை யிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். மேலும் கூறிய தாவது,

மனித உரிமை மீறல் தொடர்பாக விசாரணை செய்வதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆணைக்குழுவொன்றை நியமித்தார். அந்த ஆணைக்குழுக்களின் செயற்பாடுகளைக் கண்காணிக்க சர்வதேச குழுவொன்று அமைக்கப்பட்டது.

அந்த ஆணைக்குழு தனது முதலாவது அறிக்கையைத் தற்போது வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையின்படி, ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயற்பாடுகள் திருப்திகரமாகவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட குழுவே இந்த விமர்சனத்தை முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. தமிழ் மக்களை கொழும்பிலிருந்து வெளியேற்றியமைக்காகப் பிரதமர் மன்னிப்புக் கேட்டுள்ளார். ஆனால்அரசாங்கத்தின் செயற்பாடுகளைப் பார்க்கும்போது தமிழீழம் விரைவில் உருவாகிவிடும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

அப்படியானால் தமிழீழத்தை வழங்கிவிட்டு பிரதமர் மன்னிப்புக் கேட்பாரா? தமிழ் மக்களை வெளியேற்றியமை தவறு என்று நாங்கள் கூறியபோது நாங்கள் புலிகளுக்கு ஆதரவு வழங்குவதாகத் தெரிவித்தனர். அப்படியானால் உயர் நீதிமன்றமும் புலிகளுக்கு ஆதரவு வழங்குகிறதா? என்றும் கேட்கின்றோம். (ச-5)

# 10 மாதங்களாக எந்தக் கொடுப்பனவுக்ளையும் வழங்காதிருப்பது சட்டத்தை மீறும் செயலாகும்

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

தமது கடமை நிலையங்களுக்குத் திரும்பிச் செல்ல முடியாத நிலையில் வெளிமாகாணங்களில் உள்ள பாடசாலைகளில் தற்காலிக இணைப்பு செய்யப்பட்டுள்ள ஆசிரியர்களுக்கு 10 மாதங்களாக எதுவிதமான கொடுப்பனவுகளையும் வழங்காமல் இருப்பது மனிதாபிமான சட்ட நியாயங்களை மீறிய செயலாகும். இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் ஓகஸ்ட் 11 ஆம் திகதி வடக்குக் கிழக்கில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக ஏ-9 பாதை மூடப்பட்டதையடுத்து வடக்குக் கிழக்கிலுள்ள கடமை நிலையங்களுக்குத் திரும்பிச் செல்ல முடியாமல் கணிசமான அளவுஆசிரியர் மேல்மாகாணம் உட்பட வெளிமாகாணங்களில் தங்கியுள்ளனர்.

இவர்களுக்கு மத்திய கல்வி அமைச்சின் அறிவுறுத்தலுக்கமைய பாடசாலைகளில் தற்காலிக இணைப்பு வழங்கப்பட்டது. இவ்வாறு தற்காலிக இணைப்புப்பெற்ற ஆசிரியர்கள் தமக்கு இணைப்பு வழங்கப்பட்டுள்ள பாடசாலைகளில் கடமையாற்றி வருகின்றனர்.

எனினும் இவர்களுக்குக் கடந்த 10 மாதங்களாக எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படவில்லை. இது தொடர்பாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் நிர்வாக செயலாளர் எஸ்.சரவணபவானந்தன் தகவல் தெரிவிக்கையில்,

தொழிற்சட்டத்தின் பிரகாரம் ஆறு மாதங்கள் (180) நாள்கள் தொடர்ச்சியாக்க் கடமை நிலையம்ஒன்றில் பணியாற்றும் ஒருவருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டு அவர்களுக்குரிய உரிமைகள், சலுகைகள், கொடுப்பனவுகள் சட்டரீதியாக உறுதி செய்யப்பட வேண்டும். இடம்பெயர்ந்து தற்காலிக இணைப்புப்பெற்ற வெளிமாகாண ஆசிரியர்களுக்கு 10 மாதங்களாக எதுவிதமானக் கொடுப்பனவுகளையும் வழங்காமல் இருப்பது மனிமாபிமானத்திற்கு முரணான சட்ட விரோத செயல்முறையாகும் என்றார். (ச-5)

# பொருளாதாரத்தை சீரழிக்க விடுதலைப்புலிகள் முயற்சிக்கின்றனர்

## ஊடக அமைச்சர் கூறுகிறார்

பயங்கரவாத செயற்பாடுகளின் மூலமாக நாட்டில் உள்ள கேந்திர பொருளாதார மையங்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டு நாட்டின் பொருளாதாரத்தை சீர்குலைப்பதற்கு புலிகள் முயற்சித்து வருகின்றனர் என்று ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

புலிகளின் இவ்வாறான முயற்சிகளுக்கு எதிர்க்கட்சியும் பயங்கரவாத செயற்பாடுகளுக்கு ஆதரவான சில குழுக்களும் ஆதரவாகச் செயற்படுகின்றன என்றும் அவர் சொன்னார்.

அதி உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம் பெறுகின்ற நிலையில் நாட்டின் பாதுகாப்புக் குறித்து கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் நாட்டின் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டு வரும் நிலையில் புலிகள் நாட்டின் பொருளாதாரத்தை சீர்குலைக்கும் நோக்கிலும் நாட்டு மக்கள் அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்கும் வகையிலும் பொருளாதார மையங்களை இலக்குவைத்து தாக்குதல் நடாத்துவதற்கு முயற்சித்து வருகின்றனர்.

அதன் ஒரு கட்டமாகவே வெல்லம்பிட்டியில் உள்ள மின்சாரக் கம்பத்தின் மீது குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. விடுதலைப்புலிகளினால் அண்மைக்காலமாக இலக்குவைக்கப்பட்ட பல இலக்குகள் பொதுமக்கள் வழங்கிய தகவல்களினால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் பெருந்தொகையான ஆயுதங்களும் மீட்கப்பட்டுள்ளன. பயங்கரவாத செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படவேண்டுமாயின் பொதுமக்களின் ஆதரவு கட்டாயமாக தேவைப்படும் என்றார். (ச-5)

## வான்தாக்குதல்கள் தொடரும்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்படும் வான் தாக்குதல்களை கட்டுப்படுத்தும் முகமாக அவர்களது முகாம்களை முற்றாக இல்லாமல் செய்வதற்கு இலங்கை விமானப் படையினரால் தாக்குதல்கள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வரும் என்று விமானப் படைத் தளபதி எயார் மார்சல் றொசான் குணத்திலக தெரிவித்துள்ளார்.

குறுகிய காலத்தில் விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்ட வான் தாக்குதல்களை கட்டுப்படுத்தும் முகமாக இலங்கை விமானப் படையினர் மிக நீண்டகாலத்திற்கு இவற்றை செயற்படுத்தும் முகமாக வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-5)

## பணம் பெற்றுக் கொண்டதை...

மேற்கொள்வதற்கு பாராளுமன்றத் தெரிவுக் குழு அமைக்கப்படவேண்டுமென ஐ.தே.க. கோரிக்கை விடுத்துள்ளது.

சிறிபதி சூரியராட்சியும், டிரான் எலஸும் வழங்கிய தகவலின் அடிப்படையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார். இக் குற்றச்சாட்டில் எதுவித உண்மையும் இல்லை.

கடந்த கால ஐ.தே.க.ஆட்சியின் போது மனித உரிமை மீறல் சம்பவங்கள் அநேகம் இடம்பெற்றன. தமிழ் மக்கள் பகிரங்கமாகவே படுகொலை செய்யப்பட்டனர். ஆனால் இச் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளுக்காக பாராளுமன்றத் தெரிவுக்குழு அமைக்க ரணில் விக்கிரமசிங்க இணக்கம் தெரிவிக்கவில்லை.

கொழும்பு விடுதிகளில் இருந்து தமிழ் மக்கள் அவர்களின் விருப்பத்துடன் தான் வெளியேற்றப்பட்டதாக பாதுகாப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். கொழும்பில் அவர்களது வாய்மூல அனுமதியும் வவுனியாவில் அவர்களது எழுத்துமூல அனுமதியும் பெறப்பட்டுள்ளது.

இச் சம்பவம் முற்றிலும் பிழையென்றோ முற்றிலும் சரியென்றோ கூறிவிடமுடியாது. இரு பக்க நியாயங்களையும் நாம் அவதானிக்கவேண்டும்.

பாதுகாப்புப் பிரிவினருக்கு பெரும் சவாலாக இருந்த பாரிய குண்டுத் தாக்குதல் சம்பவங்கள் இத்தகைய விடுதிகளி லிருந்தே திட்மிடப்பட்டுள்ளமை புலன்விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

எனவே தன்னைப் பொறுத்தவரை அரசாங்கம் மன்னிப்புக்கோரக்கூடிய அளவில் பெரிய தவறு ஒன்றும் நடைபெறவில்லை என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர்களான லக்ஷ்மன் யாப்பா, ராஜித சேனாரட்ண மற்றும் மகிந்தானந்த அலுத்கமகே ஆகியோரும் கலந்து கொண்டனர். (ச-5)

## சிறுபான்மையினக் கட்சிகள்...

மாநாடு ஒன்று நேற்று நடை பெற்றது. அதில் உரையாற்றிய போருக்கு எதிரான முன்னணியின் தலைவர் குமார்ரூப சிங்க மேலும் கூறியுள்ளதாவது;

வடக்குக் கிழக்கில் செயற்படும் ஆயுதக் குழுக்களை நிராயுதபாணிகளாக்கவேண்டும் அல்லது அவர்களை படையில் இணைத்துக் கொள்ளவேண்டும். அத்துடன் கொழும்பில் விடுதிகளில் தங்கியிருந்த் தமிழ் மக்கள் வெளியேற்றப்பட்டமை, காணாமல் போதல், ஆள் கடத்தல் மற்றும் ஆயுதக் குழுக்களால் மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்தும் போருக்கு எதிரான முன்னணி கவனம் செலுத்தியுள்ளது.

கொழும்பில் விடுதிகளில் தங்கியிருந்த தமிழ் மக்களை வெளியேற்றிய சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரின் விசா விண்ணப்பத்தை பிரித்தானிய உயர் ஸ்தானிகராலயம் நிராகரித்திருந்தது.

இந் நிலைமை எதிர் காலத்தில் அரசாங்க அதிகாரிகளுக்கும் ஏற்படக்கூடுமென போருக்கு எதிரான தேசிய முன்னணியின் தலைவர் குமார் ரூபசிங்க தெரிவித்துள்ளார். இதனிடையே சிறுபான்மை இனங்களை பிரதிநிதித்துவப்படும் கட்சிகள் அரசாங்கத்தில் இருந்து வெளியேற வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளது.

இவ் ஊடக வியலாளர் மாநாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மேலக மக்கள் முன்னணி, ஜனநாயக இடது சாரி முன்னணி, புதிய இடது சாரி முன்னணி உள்ளிட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (ச-3)

## ஜனாதிபதி...

இரு தரப்புப் பேச்சுவார்த் தைகளை ஜனாதிபதி நடத்தவுள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்தது.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலநோம்புகை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல, சமூக சேவைகள் மற்றும் சமூக நலநோம்புகை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரும் இவ் விஜயத்தில் ஜனாதிபதியுடன் சென்றுள்ளதாகவும் ஜனாதிபதி செயலகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை ஜனாதிபதி ஒருவர் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் மாநாட்டில் கலந்து கொள்கின்றமை இதுவே முதல் தடவையாகும். (ச-5)

## சர்வதேச...

விசாரணைகளுக்காக ஜனாதிபதி விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டது. இந்த விசாரணை ஆணையத்தின் செயற்பாடுகளை கண்காணிக்க இந்திய ஓய்வு பெற்ற நீதிபதி பகவதி தலைமையில் 11 பேர் கொண்ட சர்வதேச வல்லுநர் குழு அமைக்கப்பட்டது.

ஜனாதிபதி ஆணையம் செயலற்றது என்றும் சர்வதேச விதிகளை பின்பற்ற வில்லை என்றும் தனது முதலாவது இடைக்கால அறிக்கையில் சர்வதேச வல்லுநர் குழு கடுமையாகச் சாடியிருந்தது.

சர்வதேச வல்லுநர் குழுவில் இடம் பெற்றுள்ள பிரான்ஸின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பெர்னாட் கௌச்னெரும் விசாரணைகளில் உரிய முன்னேற்றத்தை வெளிப்படுத்தாவிட்டால் இலங்கைக்கு பிரச்சினைகள் ஏற்படும் என்று எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## மாணவன்...

முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மற்றும் சாவகச்சேரி மந்துவில் மேற்கைச் சேர்ந்த இராசேந்திரன் கஜன் (வயது 19) என்ற இளைஞன் தோட்டத்தில் இருந்தபோது அப் பகுதியில் பவஞ், மோட்டார் சைக்கிள்களில் வந்த இராணுவத்தினர் அவரை கைது செய்து சென்றதாகவும் உறவினர்களால் யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதைவிட சாவகச்சேரி சரசாலை வடக்கைச் சேர்ந்த செல்வராசா சதீஸ் (வயது 21) மற்றும் சாவகச்சேரியைச் சேர்ந்த நாகரெத்தினம் மோகனன் என்ற இளைஞரையும் காணவில்லையென யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ச-5)

## ஜனாதிபதியின் விசே...

அலுவலர் என்ற வகை யில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடமையில் வழமைபோன்று கிராம அலுவலர்கள் ஈடுபடுத்தப்படாது குறிப்பிட்ட சில அலுவலர்களை நியமனம் செய்யும்படியும் அவர்கள் மூலமே குடும்ப விபரங்கள் சேகரிக்கப்படவேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இத்தகைய குடிசன மதிப்பீடு தமிழ் மக்களுக்கு பாரிய நெருக்கடியையும் அதேநேரம் தமிழ் மக்களின் கல்வி, வேலை வாய்ப்புக்கள் மற்றும் நிதியொதுக்கீடு உட்பட பல பாதிப்புக்களையும் ஏற்படுத்தும் எனப் பலரும் அச்சம் தெரிவிக்கின்றனர்.

கடந்த 2 ஆயிரம் ஆண்டு குடிசன மதிப்பீடு இலங்கை முழுவதும் மேற்கொள்ளப்பட்ட போதிலும் வடக்கு கிழக்கில் மக்கள் இடம் பெயர்வுக்கு உள்ளாகியதைக் கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டு வடக்குக் கிழக்குத் தவிர்ந்து ஏனைய மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

தற்போது மட்டக்களப்பு திருகோணமலை அம்பாறை மற்றும் யாழ்ப்பாணத்திலும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. இத்தகைய நிலைமையில் நாடாளுமன்றத்தில் சிங்களப் பேரினவாதக் கட்சிகளான ஹெல உறுமய, ஜே.வி.பி.போன்ற கட்சிகள் வடக்குக் கிழக்கில் ஒரு குடிசன மதிப்பீடு மேற்கொள்ளப் பட வேண்டும் என வலியுறுத்தி வந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ச-5)

## கொடிகாமம்...

தெரிவித்தனர். இதேவேளை சம் பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட சாவகச்சேரி நீதிவான் சடலங்களை அடையாளம் காண்பதற்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு கொடிகாமம் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச-5)

## பிரதமர்...

பிரிந்திருந்தனர். தற்போது ஒன்றாகி விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக உள்ளனர். இது அவமானகரமானது. தமிழ் மக்களை புலிகள் பின்னால் செல்ல அரசாங்கம் உதவி இருக்கிறது என்றார் அவர். (ச-5)

## இலங்கை இனப்பிரச்சினை...

சுமார் 30 இற்கும் மேற்பட்ட சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

இலங்கை அமைதி முயற்சிகளுக்கும் மனித உரிமைகள் கண்காணிப்புக்கும் அமெரிக்கா தொடர்ந்து ஆதரவளிக்க வேண்டும். அமெரிக்காவின் உதவி வழங்கும் அமைப்புக்கள் இலங்கையில் தொடர்ந்து முழுமையாக பணியாற்ற வேண்டும். மனிதாபிமான பணிகளுக்கான உதவித் தொகை அதிகரிக்கப்பட வேண்டும்.

தற்போது இலங்கை நிலைமைகள் குறித்து கவலை கொள்கிறோம். இனப்பிரச்சினையால் ஏப்ரல் 2006 ஆம் ஆண்டு முதல் இதுவரை ஐ.நா.தரவுகளின்படி 2 இலட்சத்து 99 ஆயிரம் பேர் புதிதாக இடம் பெயர்ந்துள்ளனர்.

இடம் பெயர்ந்தோர் முகாம்களின் நிலை மிகவும் மோசமாக உள்ளது. இரு தரப்பினரும் வான்குண்டுத் தாக்குதலை தொடர்ந்து நடத்துவதால் மக்கள் இடம் பெயர்கின்றனர்.

முகாம்கள் மீளக் கட்டமைக்கப்பட வேண்டும். முகாம்களுக்குப் பாதுகாப்பளிக்க வேண்டும். முகாம்களில் உள்ளோரை பல வந்த மாக வெளியேற்றும் நடவடிக்கைகள் தொடர்கின்றன.

மிதிவெடிகளை அகற்றி , போதுமான உணவு, தங்குமிடம், கழிப்பிட வசதிகள் செய்து கொடுக்காமல் மக்களை மீளக் குடியேற்றுவது பாரிய மனித உரிமை மீறலாகும். இலங்கையின் பாரிய மனித உரிமை மீறல் மற்றும் அரசியல் பிரச்சினைகளில் அமெரிக்கா பங்களிப்புச் செய்ய வேண்டும்.

இலங்கை அரசாங்கம் வான் குண்டுத் தாக்குதல் நடத்துவதை கைவிட வலியுறுத்த வேண்டும்; நிலைமைகளைக் கண்காணிக்க சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு ஏற்படுத்தப்படவேண்டும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)


6-ம் ஆண்டு நினைவலைகள்



அமரர் சிவகாமி சின்னத்தம்பி

(இளைப்பாறிய கனிஷ்ட பாடசாலை அதிபர், யா/வட இந்து மகளிர் கல்லூரி)

அன்புடன் நினைவு கூரும் - குடும்பத்தினர்

தொ.பே.இல:-00442082061365,

021 2263417, 021 222 6286

கரவெட்டி மேற்கு, கரவெட்டி.

(096

பகிரங்க ஏல விற்பனை

இலங்கை செஞ்சிலுவை சங்கம், யாழ்.கிளை.

செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையில் மேலதிகமான பாவித்த சில பொருட்கள் 17.06.2007 மு.ப.10.00 மணிக்கு பகிரங்க ஏலவிற்பனை செய்யப்படும். இப் பொருட்களை 16.06.2007-ல் மு.ப.9.00 மணி தொடக்கம் பி.ப. 1.00 மணி வரை கிளையில் பார்வையிடலாம். விற்பனை செய்தவுடன் அதற்கான பணத்தை உடனடியாக எம்மிடம் செலுத்தி பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்ளலாம்.

*கிளை நிறைவேற்று உத்தியோகத்தர்,*
*இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,*
*இல. 73, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.*

(C-162)


வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.06.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.